# குயில் ஒரு தர்மவாளி

நாரா நாச்சியப்பன்

# குயில் ஒரு குற்றவாளி

## கதைப் பாட்டுகள்

## நாரா நாச்சியப்பன்

தமிழாலயம்

137, ஜானி ஜான்கான் சாலை

சென்னை-600 014

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | ... | KUYIL ORU KUTRAVALI |
| Author | ... | NARA NACHIAPPAN |
| Artist | ... | Thennan |
| Language | ... | Tamil |
| Edition | ... | First |
| Publication | ... | May, 1985 |
| Copy-right | ... | Author |
| Paper used | ... | 10.9 kg. White Printing |
| Size | ... | Crown octavo |
| Printing types used | ... | 12 Point |
| Pages | ... | 64 |
| Copies | ... | 1200 |
| Price | ... | Rs. 5/- |
| Printers | ... | NOVEL ART PRINTERS.<br>Madras - 600 014.<br>Phone : 82731 |
| Publishers | ... | Thamizhalayam<br>137, Jani Jan Khan Road<br>Madras - 600 014. |
| Subject | ... | Story Poems For Children |

# முன்னுரை

கதை கேட்பதென்றால் எல்லாருக்கும் ஆசையாகத்தான் இருக்கிறது. மிகப் பழங்காலத்திலிருந்து மனிதன் கதை கேட்டே வளர்ந்திருக்கிறான். கதை கேட்பது மனிதனுக்கு ஒரு பொழுது போக்கு!

அந்தப் பொழுதுபோக்கே பயனுள்ளதாக அமைந்து விட்டால், நன்மை இரண்டு பங்காகிறது. அறிஞர்கள் மனிதனுக்குக் கதை கேட்பதில் உள்ள ஆசையை அடிப்படையாக வைத்து—அறிவு தரக்கூடிய நல்ல கருத்துக்களை கதைகளின் வழியாகச் சொன்னார்கள்.



குழந்தைகளுக்குக் கதை கேட்பதென்றால் கற்கண்டு தின்பது மாதிரி. அந்தக் கதைகளே பாட்டில் அமைந்திருந்தால் அவர்களுக்கு ஏற்படும் களிப்பே தனி. ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் சொல்லுகிற கதைகள் மிக இன்பம் தரக் கூடியவை.

இந் நூலில் 21 கதைப் பாடல்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சுவையானவை. எளிய பாடல்கள். இசையோடு பாடினால் இன்பந் தரக் கூடியவை. நல்ல கருத்துள்ளவை. பெரும்பாலானவை உண்மையில் நடந்த கதைகள்.

தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு இவை என் அன்புப் படைப்புகள்!

நாரா நாச்சியப்பன்

# கதைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | எது மேல்? | 5 |
| 2. | உழைப்பின் வெற்றி | 7 |
| 3. | அடிமை சைது | 9 |
| 4. | கங்கைத் தண்ணீர் | 11 |
| 5. | துணிச்சல் காரன் | 14 |
| 6. | யாருக்குச் சொந்தம்? | 17 |
| 7. | குறும்புக்காரக் குமரன் | 19 |
| 8. | அழகன் | 22 |
| 9. | கரித்துண்டு | 25 |
| 10. | தந்தி வந்தது | 27 |
| 11. | உழைத்துப் பிழைத்தான் | 29 |
| 12. | யாரே காப்பார்? | 31 |
| 13. | கடவுள் இருக்கும் திசை | 33 |
| 14. | சூழ்ச்சிக்கஞ்சாத அறிஞன் | 35 |
| 15. | பூமிக்குப் பாரம் | 41 |
| 16. | தேரை மறித்த வேர் | 43 |
| 17. | திருமணப் பரிசு | 46 |
| 18. | பாவேந்தர் பாயிரம் | 49 |
| 19. | காட்டில் விருந்து | 51 |
| 20. | இளங்கோ துறவு | 55 |
| 21. | ஞயில் ஒரு குற்றவாளி | 58 |

# எது மேல்?

ஒருநாள் காட்டுப் பாதையிலே
யூதன் ஒருவன் சென்றனனே
திருடர் கூட்டம் ஒன்றவனைச்
சேர்ந்து வளைத்துக் கொண்டதுவே.

அடித்தும் உதைத்தும் பணப்பையை
அவர்கள் பறித்துச் சென்றனரே.
உடுத்தத் துணியும் இழந்தந்த
யூதன் கிடந்தான் வழியோரம்.

அடியும் உதையும் பலமாகும்
அதனால் காயம் பெரிதாகும்
வடியும் குருதி மிகமிகவே
வலிதாங் காமல் முனகினனே.

கொள்ளைக் காரர் சென்றபின் ஓர்
குருக்கள் அந்த வழிச்சென்றார்
சள்ளைப் பட்டுத் துடிதுடித்துச்
சாகக் கிடப்போன் தனைக்கண்டார்.

ஓரங் கிடக்கும் அவனுக்கோர்
உதவி கூடச் செய்யாமல்
ஈர மற்ற மனத்துடனே
ஏகி விட்டார் தன்வழியே.

பெரிய குருக்கள் அவர்சென்ற
பின்னர் கோயிற் பண்டாரம்
ஒருவர் அந்த வழிச் சென்றார்
உதவ வில்லை அவருந்தான்.

சமேரியாவாம் ஒரு நாட்டைச்
சார்ந்த மனிதன் ஒருவணிகன்
சுமைமிக் கதுவாம் கழுதையுடன்
தோன்றி னானவ் வழிதனிலே.

யூதர் குலமும் சமேரியரும்
ஒருவர்க் கொருவர் பெரும்பகையாம்!
ஆத லாலே எதிர்ப்பட்டால்
அவர்க்குள் சண்டை வந்திடுமாம்.

அந்த மனிதன் யூதனிடம்
அணுகிச் சென்றான்; புண்ணனைத்தும்
கந்தை எடுத்துத் துடைத்துவிட்டுக்
கட்டுப் போட்டு முடித்தனனே.

யூத னைத்தன் கழுதையிலே
உட்கார்ந் திருக்கச் செய்தருகில்
ஆதர வாகப் பிடித்துக்கொண்
டவனும் நடந்து சென்றனனே.

தூய ஏசு கதைசொன்னார்
சூழ்ந்த தொண்டர் தமைக்கேட்டார்;
"கோயிற் பணியா? பகைக்கிரங்கும்
குணமா? எதுமேல்? சொல்வீரே!"

# உழைப்பின் வெற்றி

அப்பா அம்மா யாரென்றே
அறியாய்ச் சிறுவன் கந்தன்தான்
தப்பா தெங்கும் சென்றேகித்
தன்கை நீட்டி யிரந்திடுவான்.

''ஐயா தருமம்!'' எனப்பாடி
அலைந்து பிச்சை வாங்கிடுவான்
மெய்யாய் ஏற்ப திழிவென்னும்
மேலாங் கருத்தை அவனறியான்.

ஒருநாள் நல்ல திருநாளாம்
ஊர்க்கோ யிலிலே பெருந்திரளாம்
வருவாய் நிறையக் கிடைக்குமென
வந்தார் பிச்சைக் காரரெலாம்.

குருடன், நொண்டி, நோயாளி
குள்ளன், முடவன், பித்தனிவர்
வரிசை தனிலே குவளையுடன்
வந்து நின்றான் கந்தனுமே!

நெஞ்சில் ஈசன் நினைப்புடனே
நெருங்கி வந்த மனிதரெலாம்
பஞ்சப் பாட்டால் மனமிளகிப்
'பாவம்!' என்று காசளித்தார்.

அருளும் அன்பும் பொருந்தியதாம்
அழகு வடிவம் தாங்கியொரு
பெரியார் வந்தார்; அவர்எதுவும்
பிச்சைக் காரர்க் கீயவிலை.

கந்தன் அவர்பின் ஓடினனே
காசு கேட்டு நின்றனனே.
அந்தப் பெரியார் வாய்திறந்தோர்
அரிய கருத்தை வழங்கினரே!

"தாழ்ந்து தாழ்ந்தே எத்தனைநாள்
தம்பீ நீயும் பிழைத்திடுவாய்?
ஆழ்ந்து சிந்தித் திடுவாயேல்
அருமை யான வழிகாண்பாய்.

"தன்னை நம்பி வாழ்வோனே
தலைநி மிர்ந்து வாழ்ந்திடுவான்"
என்னும் கருத்தைச் சொல்லியவர்
ஏகி விட்டார் தம்வழியே.

பிச்சைக் கலைந்தோன் வேலையொன்று
பெறுதற் கலைந்தான் நெடுநாளே
தச்சன் ஒருவன் கடைசியிலே
தன்கை யாளாய்க் கொண்டானே.

உழைத்துப் பிழைத்தான்; பிறர்தயவை
ஒருநா ளேனும் நாடாதே!
அழைத்துப் பிறர்தாம் பாராட்டும்
அரிய நிலையை அடைந்தானே.

# அடிமை சைது

அரபு நாட்டில் ஒருசந்தை
அதன்பேர் உக்கால் என்பதுவாம்
பிரபு மக்கள் அடிமைகளைப்
பேரம் பேசும் இடமதுவாம்

சைதென் கின்ற ஒருமனிதர்
சண்டை ஒன்றில் தோற்றதனால்
கைதி ஆனார்; சந்தையிலே
காசுக் கவரை விற்றனரே.

அக்கிம் என்னும் ஒருவணிகர்
அவரை விலைக்கு வாங்கினரே
தக்க பரிசுப் பொருளாகத்
தன்அத் தைக்குக் கொடுத்தாரே.

அருமை அத்தை கத்தீஜா
அடிமை ஆளைத் தம்கணவர்
பெருமான் நபிகள் நாயகம்பால்
பிரியத் தோடு கொடுத்தாரே.

அன்பு மிக்க நாயகியார்
அளித்த பரிசை நாயகமும்
இன்ப மாக ஏற்றனரே
இனிதே அடிமை தனைநோக்கி,

''ஐயா உமக்கு விடுதலைநான்
அளித்து விட்டேன் நீரினிமேல்
மெய்யாய் அடிமை அல்ல''என
மேலும் சொன்னார் பெருமானார்.

''விருப்ப மிருந்தால் இருந்திடலாம்
வேண்டா மெனிலோ போய்விடலாம்''
அருட்பே ரண்ணல் அன்புமொழிக்
கடிமை யானார் சைதவரே.

விலையைக் கொடுத்துத் தன்மகனை
விடுவிப் பதற்கே தந்தையவர்
அலைந்து தேடிக் கடைசியிலே
அடைந்தார் பெருமான் வீட்டினையே.

உரிய மகனோ உரிமையுடன்
உலவக் கண்டு மனங்களித்தார்
அரிய மகனைத் தன்னுடனே
அழைத்தார்; மகனோ மறுத்துரைத்தார்.

''விற்று வாங்க முடியாத
விந்தை யடிமை ஆனேன்நான்
பற்றுக் கொண்டேன் பெருமானின்
பக்க மிருந்து பணிசெயவே.

''நல்ல பெரியோர் அன்புக்கே
நாளும் அடிமை யாவதிலே
எல்லை யில்லா மகிழ்வுண்டாம்''
இதுவே சைதின் மொழியாகும்.

# கங்கைத் தண்ணீர்

கங்கைக் கொருநாள் நீராடக்
 கருதிச் சென்றார் குருநானக்
அங்கொரு முதிய பார்ப்பனன்நீர்
 ஆட வந்து சேர்ந்தானே.

கதிரோன் வரும்கீழ்த் திசைநோக்கிக்
 கையால் நீரை யள்ளியள்ளி
முதியோன் இறைத்தான்; மந்திரங்கள்
 முணுமுணுத்தான்; கைதொழுதான்.

கண்டார் இதனைக் குருநானக்
 கருத்தில் லாமல் இருகையால்
மொண்டு நீரை இறைக்கின்ற
 முதியோன் முன்னே சென்றாரே.

''ஆற்றின் நீரை எதற்காக
 அள்ளி யள்ளி இறைக்கின்றீர்?
மாற்றம் சொல்லவேண்டும்''என
 மற்றவன் தன்னைக் கேட்டாரே!

''இறந்து போன முன்னோர்கள்
 இருக்கின் றார்அவ் வானுலகில்
மறந்தவர் செய்த பாவமெலாம்
 மறையத் தண்ணீர் இறைக்கின்றேன்.

கறையாய்ப் படிந்த பாவமெலாம்
கங்கை நீரின் புனிதத்தால்
மறைந்து போகும்; முன்னோரும்
மகிழ்வார்'' என்றான் முதியோனே.

''ஓகோ! ஓகோ! என்றவரும்
உடனே மேற்குத் திசைநோக்கி
வேக வேக மாய் இறைத்தார்
விரிந்த கங்கை நீரள்ளி.

''ஐயா நீரும் இறைக்கின்றீர்
ஆற்று நீரை மேற்றிசையில்
மெய்யாய் உமது கருத்துரைக்க
வேண்டும்'' என்றான் முதியோனே.

''பத்துக் கல்லில் மேற்றிசையில்
பச்சை வயல்ஒன் றெனக்குண்டு
வித்திட்ட டிருக்கும் பயிர்களுக்கே
விரைவாய் நீரைப் பாய்ச்சுகின்றேன்''.


என்றார் நானக். முதியவனோ
''ஏஏ மூடா! வேடிக்கை
அன்றோ நினது செயல்?'' என்றான்
அறிஞர் அவரை நகைசெய்தான்.

''ஆற்று நீரைக் கையாலே
அள்ளி இறைத்தால் தூரத்துச்
சேற்று வயலுக் கெவ்வாறு
செல்லும்?'' என்று கேட்டானே.

“இங்கே பத்துக் கல் தொலைவில்
இருக்கும் வயலை அடையாதேல்
எங்கோ இருக்கும் வானுலகை
எப்படிக் கங்கை நீரடையும்?”

சொல்வீர் என்றார் குருநானக்
சோர்ந்து போனான் முதுகிழவன்.
“நல்லோய் நான்தான் மூட”னென
நவின்றான், திருந்தி வாழ்ந்தானே!

முள்ளை முள்ளால் அகற்றுதல்போல்
மூடத் தனத்தை ஒழித்திடவே
உள்ளி மூடர் போல்நடித்தே
உண்மை யறிஞர் பயன்கண்டார்!



# துணிச்சல் காரன்

மாநிலத்தை யாளுமொரு
மகராசா —அவர்முன்
மண்டியிட்டுத் தூதுவந்தோர்
பேசி நின்றார்.

தேனிகர்த்த பழங்கள்சில
கொண்டு வந்தோம் —இவைபோல்
தேடினாலும் பூவுலகில்
கிடைக்கா தென்போம்.

சுவைமிகுந்த பழங்களைத்தாம்
தின்றவர்கள் —உலகில்
சுகமுடனே சாவில்லாமல்
நீடு வாழ்வார்.

இவையனைத்தும் எங்களன்புக்
காணிக்கையாய் —தாங்கள்
ஏற்றுக் கொள்ள வேண்டுகின்றோம்
என்று சொன்னார்.

இந்தமொழி கேட்டிருந்த
வீர னொருவன் —உடன்
எழுந்தோடிப் பழத்திலொன்றைக்
கடித்துக் தின்றான்,

அந்தவீரன் செயல்கண்டு
வெந்தழல் போல் —மிக
ஆத்திரம்தாம் கொண்டா ரந்த
மகா ராசா

மட்டுமரி யாதையில்லாத்
துணிச்சல் காரன் —தலையை
வெட்டித் தள்வீர் என்றுராசா
ஆணை யிட்டார்.

காவல்வீரர் ஓடிச்சென்று
பிடித்துக் கொண்டார் — வீரன்
கடித்த பழம் துப்பிவிட்டுக்
கோவென் றழுதான்.

ஆவலோடு பழத்தைத் தின்னப்
போனபோது —உன்றன
அறிவுமெங்கே போனதிப்போ
தழுவ தேனோ?

என்றுராசா கேட்டவுடன்
அந்த வீரன் —நான்
இறப்புக்கஞ்சும் கோழையல்ல
இந்தப் பழத்தில்

ஒன்றெடுத்துத் தின்றதற்கே
உயிரி ழந்தால்
உள்ள தெல்லாம் தின்னும்நீங்கள்
பிழைப்ப துண்டோ?

என நினைத்துத் தானழுதேன்
மகாராசா —தாங்கள்
எச்சரிக்கை யாயிருக்க
வேண்டு மென்றான்.

மனத்துணிச்சல் அதிகமுள்ள
குறும்புக் காரன் —பதில்
வார்த்தைகேட்டுச் சிரித்துவிட்டார்
மகா ராசா.

மனத் திருந்த கோபமெல்லாம்
மறைந்து போக —அவனை
மன்னித்துடன் விட்டு விட்டார்
மகா ராசா

உடனுக்குடன் வேலைசெய்யும்
அறிவிருந்தால் —இந்த
உலகத்தில் இன்பமுடன்
வாழ லாகும்.

திட மனமும் துணிச்சலுந்தான்
சேர்ந்தி ருந்தால் —வரும்
தீமைகளை எதிர்த்து நிற்கும்
வன்மை சேரும்.

# யாருக்குச் சொந்தம்?

அருமை நண்பர் புடைசூழ
　　அழகுப் பூங்கா வழியாக
ஒருநாள் பொழுது போக்கிடவே
　　உவந்து சென்றான் சித்தார்த்தன்.

தாராக் கூட்டம் ஒன்றங்கே
　　தலைக்கு மேலே சிறைவிரித்துச்
சீராய்ப் பறந்து வான்வழியே
　　செல்லும் காட்சி கண்டானே.

ஐயோ பாவம் ஒருதாரா
　　யாரோ எய்த அம்பாலே
மெய்துடித்துப் புண்பட்டு
　　மேலிருந்து வீழ்ந்ததுவே.

குருதி வழியக் காலடியில்
　　குற்றுயி ராகக் கிடந்ததனைக்
கருணை வழியும் நெஞ்சோடு
　　கையில் எடுத்தான் சித்தார்த்தன்.

பாய்ந்த அம்பை வெளிப்படுத்திப்
　　பாயும் குருதி தடைப்படுத்தி
வாய்ந்த கருணை மிகைப்படவே
　　மருந்து வைத்துக் கட்டினனே.

ஆவ லோடு தாராவை
அம்பு பாய்ச்சி வீழ்த்தியவன்
தேவ தத்தன் எனுஞ்சிறுவன்
சித்தார்த்தன் தன் உறவினனாம்.

'என்றன் அம்பால் வீழ்ந்ததுதான்
எனக்குச் சொந்தம் ஆதலினால்
சென்றத் தாரா தனைக்கொடுக்கச்
சித்தார்த் தனைநீ கேட்டிடுவாய்

செல்வாய்' என்றோர் பையனையே
தேவ தத்தன் அனுப்பினனே.
'கொல்ல முயன்றோன் தன்னிடமே
கொடுக்க மாட்டேன் தாராவை,

'உயிரைப் போக்க முயன்றவனுக்
குரிமை யில்லை தம்பி,இதன்
உயிரைக் காத்த எனக்கேதான்
உரிய தாகும்' எனச்சொல்லி

அந்தப் பையன் தனைத்திருப்பி
அனுப்பி விட்டான் சித்தார்த்தன்.
வந்து வீழ்ந்த தாராவும்
வாழ்வு பெற்றுப் பிழைத்ததுவே.

அன்பு கொண்டு தாராவை
ஆதரித்த சிறுவன்தான்
துன்பம் போகும் வழிகண்ட
தூய புத்த பெருமானாம்.

# குறும்புக்காரக் குமரன்

குமரன் என்னும் சிறுபையன்
குறும்புத் தனத்தில் பெரியவனாம்
அமர்ந்தி ருந்தான் நீர்க்குளத்தின்
அருகில் உள்ள மரக்கிளையில்.

வீடு தோறும் நீர்வழங்கும்
வேலைக் காரி வேலாயி
பாடிக் கொண்டே நீரெடுக்கும்
பானை கொண்டு வந்தாளே.

மண்ணால் ஆன பானையதை
மணிக் குளத்தில் தானமிழ்த்தி
உண்ணும் நீரை மொண்டவளும்
உயரத் தலையில் வைத்தாளே.

மண்ணால் ஆன பானையிலே
வாகாய்த் துளையொன் றிட்டதனைக்
கண்ணால் காண வேண்டுமெனக்
கையில் எடுத்தான் கவண்வில்லை.

பாய்ந்து சென்ற கவண்உருண்டை
பானை ஓட்டைத் துளைத்ததுவே
வாய்ந்த துளையின் வழிந்தண்ணீர்
பீச்சிப் பாய்ந்து வந்ததுவே!

பீச்சிப் பாயும் நீர்கண்டு
பெரிதும் குமரன் களிப்படைந்தான்
சேச்சே! என்ன நேர்ந்ததெனத்
திரும்பிப் பார்த்தாள் வேலாயி.

இறக்கிப் பார்த்தாள் பானையினை
இதயம் நொந்து போனாளே.
பரக்கப் பரக்க விழித்தாளே
பானைக் கென்ன செய்வதென.

புதிய பானை வாங்கிவரப்
போது மான காசிருந்தால்
எதுநேர்ந் தாலும் கவல்வாளோ?
இதயந் துடித்து நிற்பாளோ?


கவலைப் பட்டு நின்றவளைக்
கண்டு குமரன் மனம் நொந்தான்
தவறு தன்னால் நேர்ந்ததெனத்
தானும் துயரம் கொண்டானே.

விரைந்து நடந்து சென்றான்தன்
வீட்டு மச்சில் அடுக்கடுக்காய்
இருந்த புதிய பானைகளில்
எடுத்து வந்தான் ஒன்றினையே.

விழித்துக் கொண்டு நின்றிருந்த
வேலாயி யிடம் கொடுத்தானே.
களித்து நன்றி ததும்பிடவே
கனிந்து போற்றிப் பேசினளே.

'அம்மா நானும் விளையாட்டாய்
அளித்தேன் துயரம் உங்களுக்கே
இம்மா நிலத்தில் இனிமேலே
என்றும் செய்யேன் குறும்'பென்றான்.

'குறும்பால் நொந்தேன் என்றாலும்
குமரா உன்றன் குணங்கண்டே
இறும்பூ தடைந்தேன்' என்றன்பாய்
இசைத்துச் சென்றாள் வேலாயி.



# அழகன்

ஒருநாள் லிங்கன் வீதியிலே
உலவச் சென்ற பொழுதினிலே
குறும்பன் ஒருவன் எதிர்ப்பட்டான்
குதிரை வண்டிக் காரனவன்.

"ஐயா ஐயா உமைத்தேடி
அலைந்த நாட்கள் மிகப்பலவே
மெய்யாய் இன்று தான்கண்டேன்
மிகவும் அமைதி கொண்டேனே.

"உமக்குச் சொந்த மானபொருள்
ஒன்று நீண்ட நாளாக
எனக்குப் பாரம் போலுளதே
இன்று தொல்லை தீர்ந்த"தென்றான்.

பார்த்த தில்லை அவனை ஒரு
பண்டம் தாமும் கொடுத்ததில்லை
சீர்த்தி மிக்க லிங்கனவர்
சிந்தைக் கெதுவும் தோன்றவில்லை.

அழுக்கும் துருவும் ஏறிமிக
மழுங்கிப் போன கத்தியொன்றை
இழுக்கு மிக்க அம்மனிதன்
"இதுதான்" என்று காட்டி நின்றான்.

"இதுவா? எனதா?" எனக்கூறி
எதுவும் புரியா திருந்தவர்முன்
"இதுதான்! இதுதான்! இதுவந்த
கதையும் இதுதான்!" என்றுரைத்தான்.

"பெரிய மனிதர் ஒருவர்இதைப்
பேணி வைக்கு மாறளித்தார்.
'உரிய வரைநீ காணுங்கால்
உடனே இதனைச் சேர்த்திடுவாய்.

"பாரில் உள்ள மனிதரில்நீ
பார்க்கும் அழகில் லாதவனைச்
சேரும் இந்தப் பொரு'ளெனவே
தெரிவித்தார்அப் பெரியவரே.

"அழகில் லாதார் யாரென்றே
அலைந்து தேடிக் கடைசியிலே
வழியில் உம்மைக் கண்டுவிட்டேன்;
வாங்கிக் கொள்வீர்!" என்றுரைத்தான்.

துடுக்காய்ப் பழித்து நிற்பவன்மேல்
துளியும் கோபம் கொள்ளாமல்
வெடுக்கென் றந்தக் கத்திதனை
விரைந்து லிங்கன் வாங்கினரே.

"எனது பொருளை இத்தனைநாள்
இனிது பாது காத்ததுடன்
தனதாய் வைத்துக் கொள்ளாமல்
தந்த தற்கு நன்றியுளேன்."

சினமே தன்மேல் கொள்ளாமல்
    சிரித்து நன்றி கூறிநின்ற
மனித தெய்வம் தனைவணங்கி
    மனமுந் திருந்திச் சென்றனனே.

உருவத் தழகு குறைந்திடினும்
    உள்ளத் தழகு மிக்கவர்பால்
அருமை யான குணமிருக்கும்
    அதற்கு லிங்கன் சான்றாமே!

# கரித்துண்டு

கண்ணில் பட்ட கரித்துண்டைக்
கையில் எடுப்பான்; சுவர்மீதே
எண்ணங் கொண்ட படியெல்லாம்
ஏதோ கிறுக்கித் தள்ளிடுவான்.

வாயைப் பிளக்கும் கரும்பூனை
வாலைக் குழைக்கும் நாய்க்குட்டி
பாய்ந்து வந்த இளங்கன்றைப்
பரிவாய்த் தடவும் தாய்ப்பசுவே.

இப்படிப் பட்ட உருவங்கள்
எழுதும் அவன்கைக் கரித்துண்டே
தப்பிது தப்பென் றெத்தனைபேர்
தடுத்தும் நிறுத்த வில்லையவன்.

"வீட்டுச் சுவரைக் கெடுக்காதே
வேண்டாம் மாமா காண்பாரேல்
காட்டுப் புலியாய்ச் சீறிடுவார்
கரியை எறிந்து விடு"வென்றே

வேலைக் காரர் சொன்னதெலாம்
விழவே யில்லை அவன்செவியில்
கோபக் கார மாமாவைக்
குறித்தும் அஞ்ச வில்லையவன்.

சீறும் மாமா வீட்டுக்குத்
திரும்பி வருமுன் கரிச்சுவரை
நீரிட் டழித்து வைத்திடுவார்
நிகழும் இதுதான் நாள்தோறும்.
ஒருநாள் அழிக்க மறந்துவிட்டார்
உள்ளே நுழைந்தார் மாமாவே.
"கரியாய்ச் சுவரைச் செய்ததுயார்
காட்டு வீர்"என் றுறுமினரே!
"இன்று நேற்று நடப்பதல்ல
இதுதான் வேலை நாள்தோறும்
கொன்று விடுவீர் எனநினைத்தே
கூறா திருந்தோம்" என்றுரைத்தார்.
மாமா கோபம் குறைந்திடவே
மருகன் தன்னை அருகழைத்தார்
"ஆமாம் உன்றன் ஆசைதனை
அறிந்து கொண்டேன் நா"னென்றார்.
"தாளும் மையும் நான்தருவேன்
தனியோர் அறையும் நான்தருவேன்
நீளும் ஆசை மனத்தாலே
நினைத்த தெல்லாம் வரைந்திடலாம்.
"கரியை எறிந்து விடு"வென்றே
கனிவாய் மாமா உரைத்தவுடன்
சிறிதும் மறுப்புச் சொல்லாமல்
சிறுவன் எறிந்து விட்டானே.
படங்கள் வரையும் கலைதனிலே
பரிசும் புகழும் மிகப்பெற்றுத்
திகழ்ந்த பெரியார் ரவிவர்மா
சிறுவன் இவனே ஆமாமாம்!

# தந்தி வந்தது

தந்தி என்னும் குரல்கேட்டுத்
தாவி வந்தான் குமரப்பன்
வந்து வாங்கி உறைகிழித்து
வாசித் தானே செய்திதனை.

"கவலைக் கிடமாய் அப்பாதான்
காய லாகப் படுத்துள்ளார்
தவறா துடனே புறப்படவும்"
தந்திச் செய்தி இதுவாகும்

துடிக்கும் உள்ளம் உடையவனாய்த்
துரித மாகப் பாய்ந்தோடிப்
படுக்கை பெட்டி இவற்றோடு
பறந்து சென்றான் அப்போதே.

குப்குப் பென்று புகைவண்டி
கூவிச் சென்றது மறுநாளே
அப்பா இருக்கும் ஊருக்கே
அவனைக் கொண்டு சேர்த்ததுவே.

தோப்பில் வேலை பார்த்துவிட்டு
தோளில் துண்டைப் போட்டபடி
வேப்பங் குச்சி யாற்பல்லை
விளக்கிக் கொண்டு நடந்துசெல்லும்

அவர்யார்? அப்பா அப்பாதான்
அவருக் கொன்றும் குறைவில்லை
எவரோ தவறாய்த் தந்திதனை
எனக்குக் கொடுத்தார் எனநினைத்தான்.

சட்டைப் பையில் வைத்திருந்த
தந்தியை எடுத்து மறுபடியும்
வெட்ட வெளிச்சம் தனிற்படித்தான்
வியப்புக் கடலில் மூழ்கினனே.

குடித் தன மிருக்கும் மற்றொருவர்
குமார சாமிக் கவர்வீட்டார்
அடித்த தந்தி அதுவென்றே
அறிந்து வெட்கம் கொண்டனனே.

முழுதும் படித்துப் பாராமல்
மூடத் தனமாய்த் தான்செய்த
பழுதாம் செயலை எண்ணியவன்
பழித்துக் கொண்டான் தன்னறிவை.

அன்றே திரும்பி வண்டியிலே
அப்பா பார்க்கு முன்னாலே
நன்றே சென்னை வந்துற்றான்
நண்பர்க் களித்தான் தந்திதனை.

கவன மிருந்தால் என்றும்வீண்
கவலை யின்றி வாழ்ந்திடலாம்
தவறு செய்தல் எனுந்தீமை
தவிர்த்தே இன்பம் கண்டிடலாம்.

# உழைத்துப் பிழைத்தான்

அப்பா அம்மா யாரென்றே
அறியாச் சிறுவன் கந்தன்தான்
தப்பா தெங்கும் சென்றேகித்
தன்கை நீட்டி இரந்திடுவான்

ஐயா தருமம் எனப்பாடி
அலைந்து பிச்சை வாங்கிடுவான்
மெய்யாய் ஏற்ப திழிவென்னும்
மேலாங் கருத்தை அவனறியான்.

ஒரு நாள் நல்ல திருநாளாம்
ஊர்க் கோயிலிலே பெருந்திரளாம்
வருவாய் நிறையக் கிடைக்குமென
வந்தார் பிச்சைக் காரரெலாம்,

குருடன் நொண்டி நோயாளி
குள்ளன் முடவன் பித்தனிவர்
வரிசை தனிலே குவளையுடன்
வந்து நின்றான் கந்தனுமே.

நெஞ்சில் ஈசன் நினைப்புடனே
நெருங்கி வந்த மனிதரெலாம்
பஞ்சப் பாட்டால் மனமிளகிப்
பாவம்! என்று காசளித்தார்,

அருளும் அன்பும் பொருந்தியதாம்
அழகு வடிவம் தாங்கியொரு
பெரியார் வந்தார் அவர்எதுவும்
பிச்சைக் காரர்க் கீயவில்லை.

கந்தன் அவர்பின் ஓடினனே
காசு கேட்டு நின்றனனே
அந்தப் பெரியார் அவனுக்கோர்
அரிய கருத்தைக் கூறினரே.

"தாழ்ந்து தாழ்ந்து எத்தனைநாள்
தம்பீ நீயும் பிழைத்திடுவாய்
ஆழ்ந்து சிந்தித் திடுவாயேல்
அருமை யான வழிகாண்பாய்

தன்னை நம்பி வாழ்வோனே
தலைநிமிர்ந்து வாழ்ந்திடுவான்"
என்னும் கருத்தைச் சொல்லியவர்
ஏகி விட்டார் தம் வழியே.

பிச்சைக் கலைந்தோன் வேலைக்குப்
பெரிதும் அலைந்து திரிந்தானே
தச்சன் ஒருவன் அவனுக்குத்
தக்க வேலை கொடுத்தனனே.

உழைத்துப் பிழைத்தான் பிறர்தயவை
ஒருநா ளேனும் நாடாதே
அழைத்துப் பிறர்தாம் பாராட்டும்
அரிய நிலையை அடைந்தானே!

# யாரே காப்பார்?

சண்டை ஒன்று முடிந்தவுடன்
தனியாய்ப் பெருமான் வரும்வழியில்
கொண்ட களைப்பு நீங்கிடவே
குளிர்ந்த நிழலில் தங்கினரே

போர்வா ளதனை மரக்கிளையில்
பொருத்தி வைத்தே பெருமானார்
சோர்வு நீங்கிக் கண்ணயர்ந்து
துயில லானார் மரத்தடியில்

பகைவன் ஒருவன் தற்செயலாய்
பார்த்தான் பெருமான் தூங்குவதை
மிகவும் மகிழ்ச்சி கொண்டவனாய்
மெதுவாய் அருகில் வந்தனனே,

ஏதோ ஓசை கேட்டதனால்
எழுந்த பெருமான் தலைமாட்டில்
சூதாம் எண்ணம் கொண்டவனாய்த்
தோன்றி நின்றோன் தனைக்கண்டார்.

பெருமான் வாளைத் தன்கையில்
பிடித்து நின்ற அம்மனிதன்
"அருமை நபியே இந்நேரம்
யாரே காப்பார் உமை"யென்றான்

“அல்லா!” வென்றார் அம்மொழியில்
அடங்கி யிருந்த தென்கொல்லோ
பொல்லா மனிதன் நடுநடுங்கிப்
போட்டு விட்டான் வாளதனை

விழுந்த வாளை எடுத்தந்த
விந்தைப் பெருமான் தீயோனை
அழுந்த நோக்கி ‘உனைக் காப்பார்
யாரோ?” என்று கேட்டனரே.

“யாரும் இல்லை உமையல்லால்
ஐயா” என்று பயத்தாலே
தீரும் நிலையில் உள்ளவனைத்
திருவார் நபிகள் கண்டாரே

“அருளும் நாயன் தயவாலே
அன்பா உனைநான் மன்னித்தேன்
இருளும் எண்ணம் விலக்கிடுவாய்
இனிது வாழ்வாய் செல்”என்றார்

கொல்ல வருவார் தமைக்கூடக்
குளிர்ந்த அருளால் மன்னிக்கும்
நல்ல உள்ளம் படைத்தவரே
நாயன் தூதர் அறிவீரே.

# கடவுள் இருக்கும் திசை

அக்கா லத்தில் ஒருநாளே
அறிவு மிக்க குருநானக்
மெக்கா வுக்குச் சென்றிருந்தார்
மேதையைக் காணப் பலர்வந்தார்

ஆலயம் இருக்கும் திசைநோக்கி
அவர்தம் கால்கள் தமைநீட்டித்
சாலவும் ஓய்ந்தொரு கட்டிலிலே
சாய்ந்து படுத்துக் கொண்டிருந்தார்.

அப்போ தவரைக் காண்பதற்கே
அங்கொரு ஹாஜி வந்தாரே
தப்பு நேர்ந்தது போல்வருந்தித்
தலைவர் தம்மை அவர்நோக்கி,

"இறைவன் இருக்கும் திசைநோக்கி
இப்படிக் காலை நீட்டுவதும்
முறையோ முறையோ?" எனக்கேட்டு
முடித்தார் உள்ளத் துயருடனே.

"களைப்பு மிகுதி யால்நானும்
கண்ணை மூடிப் படுத்ததனால்
நினைப்பில் லாமல் ஒருதிசையில்
நீட்டிக் கொண்டேன் கால்களையே.

''அசதி மிகுதி யாகையினால்
யானே திரும்பிப் படுப்பதற்கு
வசதி யில்லை அன்புடையீர்
வந்தென் காலைப் பிடித்துடனே

''இறைவன் இல்லாத் திசைநோக்கி
இழுத்துத் திருப்பி விடுவீர்என்
குறையைப் பொறுப்பீர்'' எனவேண்டிக்
கொண்டார் குருதேவ் ஹாஜியிடம்.

கடவுள் எங்கும் இருப்பதனைக்
கருதிப் பார்ந்த ஹாஜியும்தன்
மடமை யுணர்ந்து பெரியவரை
மன்னிப் புக்கேட் டகன்றாரே!



# சூழ்ச்சிக்கஞ்சாத அறிஞன்

வருவ தறிந்து சொல்வதிலே
வல்லவர் உமர்கய் யாமென்றே
அரசாண் டிருந்த சுல்தானும்
அதிகம் மதிப்பு வைத்திருந்தார்.

உமரைக் கேட்டுக் கேட்டுத்தான்
ஒவ்வொரு செயலும் அவர்செய்தார்
உமரை மிகவும் மதித்ததனால்
உயர்ந்த நிலையில் வைத்திருந்தார்.

ஒருவன் ஆடிப் பிழைப்பவனாம்
உமரின் மதிப்பைக் குறைத்திடவே
இருந்தான் காலம் பார்த்திருந்தான்
எப்போ தென்று காத்திருந்தான்.

நாடு பிடிக்கப் புறப்பட்ட
நல்ல சுல்தான் உமரையும்
கூட அழைத்துச் சென்றாரே
கூத்தா டியும்தான் சென்றானே.

போரில் நமக்கே வெற்றியெனப்
புலவர் சொன்ன சொற்படியே
நேரில் வெற்றி கண்டதனால்
நெஞ்சு மகிழ்ந்தார் சுல்தானே.

வெற்றி முழக்கம் விண்ணிடிக்க
வீரர் கூட்டம் பின்னடக்கச்
சுற்றி வளைத்த கோட்டையுளே
சுல்தான் புகுந்தார் பெருமிதமாய்

அங்கொரு பெரிய கூடத்தில்
அரியணை ஒன்றைக் கண்டதிலே
சிங்கம் நிகர்த்த சுல்தானும்
சென்றுட் கார்ந்தார் பெருமையுடன்

"வீரர் களேநாம் இப்பொழுதே
வெற்றி விழாக்கொண் டாடிடுவோம்
ஆர டாஅவன் கூத்தாடி
ஆடுக" என்றவர் ஆணையிட்டார்.

சுற்றி யிருந்தோர் ஆர்ப்பரிக்கச்
சுடரும் இன்பம் குதிகொள்ள
வெற்றி நடனம் ஆடினனே
விரும்பிச் சுவைத்தார் சுல்தானே!

"அருமை அருமை நடனமடா!
அதற்கொரு பரிசு தருவனடா!
உரிமை யோடு நீகேட்கும்
ஒன்றைப் பரிசாய்த் தருவனடா!"

என்றுர் சுல்தான் கூத்தாடி
எழுந்து பணிந்து சலாமிட்டு
"நன்றொரு வாய்ப்புத் தருவீரேல்
நல்ல பரிசாம்" என்றுரைத்தான்.

“வாய்ப்பா, என்ன வாய்ப்பு?” என்றார்
வஞ்சம் நிறைந்த நெஞ்சினனும்
“ஏய்ப்பன் ஒருவனை வெளிப்படுத்த
எனக்கோர் வாய்ப்பு வேண்டும்” என்றான்

“வரும் பொருள் அறிந்து சொல்வதிலே
வல்லவர் உமர் கய் யாமென்றல்
ஒருபெரும் பொய்யென் றுணர்த்திடவே
ஒருவாய்ப் பளிக்க வேண்டும்” என்றான்.

“வாய்ப்புத் தருவேன் நானுனக்கு
வாக்குத் தந்து விட்டதனால்
காய்ப்புச் சொல்லும் பொய்யானால்
கவனம் தலையிழப் பாய்” என்றார்.

“மதிலின் வெளியில் எனைச்சேர்ந்த
மனிதர் சிலரும் உள்ளார்கள்
அதிரக் கூவி நானழைத்தால்
அவர்கள் உள்ளே வருவார்கள்.

“வடக்கா? தெற்கா? கிழக்கிலுள்ள
வாசல் தானா? மேற்காமா?
அழைக்கும் போதில் எவ்வழியாய்
அவர்கள் உள்ளே வருவார்கள்?

எதையும் முன்னால் சொல்லிவிடும்
இயல்பில் வல்ல உமர்கய்யாம்
இதையும் முன்னால் சொல்வாரா?
என்தலை பணயம்” என்றானே!

உமரை நோக்கிச் சுல்தானும்
"உமக்கிது கடிதோ?" எனக் கேட்டார்
அமைதி நிறைந்த புலவருமே
"அல்ல, அல்ல" என்றுரைத்தார்.

"மனத்து முடிவை ஒரு தாளில்
மறைவாய் எழுதி மடித்துடனே
எனக்குக் கொடுப்பீர்; ஆட்களையே
இவனும் அழைக்கக் காண்போமே"

இப்படி சுல்தான் சொன்னவுடன்
எழுதிக் கொடுத்தார் உமர்கய்யாம்
மெய்ப்படி சூழ்ச்சி பலித்ததென
மிகவும் மகிழ்ந்தான் கூத்தாடி.

"ஓடி வாரீர்?" எனக் கூவி
உடனே அழைத்தான் வஞ்சகனும்
கூடி யிருந்தோர் நாற்புறமும்
கோட்டை வழிகள் தமைப்பார்த்தார்.

தெற்கு வாசல் பார்த்தனரே
திரும்பி வடக்கைப் பார்த்தனரே
உற்று மேற்கை நோக்கிப்பின்
உடனே கிழக்கில் திரும்பினரே!

எந்த வாசல் வழியாயும்
எவரும் உள்ளே வரவில்லை
விந்தை யாகப் பார்த்திருந்தோர்
வியப்பும் திகைப்பும் கொண்டிருந்தார்.

கோட்டை மதிலின் ஒரு புறத்தில்
குண்டு பாய்ந்து தகர்த்ததனால்
ஓட்டை யாகிப் போயிருந்த
ஒருவழி யாகப் பலர்வந்தார்.

"இருக்கும் வாசல் நான்கினிலே
ஏதோ ஒன்றை உமர்கய்யாம்
குறித்தி ருப்பார் அதனைஇக்
கொடியோன், பொய்யாய்ச் செய்துவிட்டான்"

"சூழ்ச்சி பெரிய சூழ்ச்சியிது
சொல்லில் வல்லான் தனைவீழ்த்தும்
சூழ்ச்சி கொடிய சூழ்ச்சி" யெனச்
சொல்லி வீரர் வருந்தினரே.

மடித்து வைத்த தாளெடுத்து
மன்றம் அறியச் சுல்தானும்
படித்தார், இரண்டு சொற்களையே
படித்தார், முகங்கள் மலர்ந்ததடா!


"ஐந்தாம் வாசல்" என்பதுதான்
அந்த இரண்டு சொற்களடா
நொந்தான் அழுதான் கூத்தாடி
நூறு தடவை அடிபணிந்தான்.

"ஏழை பிழையைப் பொறுத்தருளி
இரக்கங் காட்ட வேண்டுமையா
மீளப் பேசேன் ஆணவமே
மேன்மை மிக்கீர்" என்றிரந்தான்.

ஆத்திரம் கொண்டா ரல்லாமல்
யாரும் அவன்பால் இரங்கவில்லை
போர்த்திறம் மிக்க வீரர்களோ
''புல்லன் ஒழிக''வென் றார்ப்பரித்தார்.

''ஆடிப் பிழைப்போன் தலையையுடன்
அறுத்து விடுக'' எனச் சொல்லிப்
பாடி மகிழும் உமருக்குப்
பரிசுகள் கொடுத்தார் சுல்தானே!

ஆயிரம் சூழ்ச்சி செய்தாலும்
அறிவுத் திறமை யுடையவரைச்
சாய்த்திட முடியா தெவராலும்
சரித்திரம் சொல்லும் உண்மையடா!



# பூமிக்குப் பாரம்

கந்தப்பர் என்றொருவர்
இந்த ஊரிலே
காசு பணம் வைத்திருந்தார்
சொந்த மாகவே

சல்லி சல்லி யாக எண்ணிச்
சேர்த்து வைப்பவர்
சரித்திரத்தில் யாருமில்லை
அவர் நிகர்ப்பவர்!

இருப்புப் பெட்டிப் பூட்டுதன்னை
ஆட்டி ஆட்டியே
திருப்பித் திருப்பிப் பார்த்திடுவார்
மீட்டு மீட்டுமே.

நிறைந்த வண்ணம் சோற்றையுண்ண
நேர்ந்து விட்டாலே
குறைந்து போகும் பணம் என்றெண்ணிக்
கொஞ்சமே யுண்பார்!

ஐயா பிச்சை என்று கேட்டு
வந்த பேர்களும்
மெய்யாகவே திட்டிவிட்டு
மீளுவார்களே!

இந்தப்படி யொருபயனும்
இன்றி வாழ்ந்தவர்
கந்தப்பரே ஒருநாளில்
காலமாய் விட்டார்!

சொந்தப்பணம் இருந்துமொரு
சுகம் காணாமலே
சுடுகாடு போய்ச்சேர்ந்தார்
ஐயோ பாவமே!

மற்றவர்க்கும் தனக்குமொரு
பயனுமில்லாமல்
மாய்ந்தவர்கள் பூமிக்கொரு
பாரம் தானம்மா



# தேரை மறித்த வேர்

சின்னஞ் சிறிய ஊரிலே
திருநா ளொன்று வந்ததே
திருநா ளன்று தேரிலே
தெய்வம் வீற்றி ருந்ததே.

தெய்வம் பெரிய தெய்வமாம்
தேரும் பெரிய தேரதாம்
தேரை யிழுக்கக் கூட்டமாய்ச்
சேர்ந்த அன்பர் மிகுதியாம்

வரிசை யிரண்டு நின்றதாம்
வடத்தை யிழுத்துச் சென்றதாம்
சென்ற போது கூடவே
தேரும் ஓட்டம் கொண்டதாம்.

ஓடிச் சென்ற தேரதே
ஓரிடத்தில் நின்றதாம்
நின்ற அங்குக் குறுக்கிலே
நீண்ட வேரொன் றிருந்ததாம்

தேரின் உருளை வேரின்மேல்
ஏற முடியா வில்லையாம்
ஏற முடியா தங்கேயே
இருக்க நேர்ந்து விட்டதாம்.

‘‘தரைக்கு மேலே பெரியதாய்த்
தலையை நீட்டிக் கிடந்தவேர்
இறைவன் ஏறி வந்ததோர்
தேரை நிறுத்தி விட்டதே!

‘‘வேருக் கேன்ன ஆணவம்
வெட்டித் தள்ள வேண்டுமே
வெட்டத் தக்க கோடரி
விரைவில் கொணர்வீர்’’ என்றனர்.

கூடி யிருந்தோர் சொல்லவே
குதித்துச் சென்றார் சிறுவரே
ஓடி வந்தார்; கோடரி
ஒன்று கொண்டு வந்தனர்.

வெட்டப் போகும் போதிலே
வேரும் நடுக்கம் கொண்டதே
வேருக் குரிய மரமுந்தான்
நெஞ்ச மொடுங்கிப் போனதே!

‘‘தெய்வம் என்றன் தெய்வமே
சிறிது பொறுத்தல் வேண்டுமே
சிறியேன் வேரில் தடுக்கியே
தேரும் நின்ற துண்மையே.

‘‘உண்மை யதுதான் ஆயினும்
உரிய பிழையும் என்னதோ?
வைய கத்தில் நானுயிர்
வாழ வழியும் இல்லையோ?

"என்னைப் படைத்திவ் விடத்திலே
இருக்கச் செய்த தெய்வமே,
இருப்ப தென்றன் பிழையதோ
இல்லை, உன்றன் பிழையதோ?

"உன்றன் பிழையைத் தீர்க்கவே
உயிரை நானும் இழக்கவோ
இந்த நீதி நாட்டவோ
இங்கு வந்தாய் தேரிலே?"

மரத்தின் கேள்வி கேட்டதும்
மறைந்த தந்தத் தெய்வமே
வருத்தி வெட்ட முனைந்தவர்
மனத்தே திகிலும் பிறந்ததே.

"வேரை வெட்ட முனைந்ததால்
விரைந்து தெய்வம் மறைந்ததே
வேண்டாம் தெய்வம் வருந்தவே
வெட்ட வேண்டாம்" என்றனர்

தேரைப் பின்னால் இழுத்தனர்
திருப்பிக் கொண்டு சென்றனர்.
ஊரில் உள்ள கோயிலின்
உள்ளே கொண்டு நிறுத்தினர்.

அங்கே தெய்வம் இருந்ததே
அழகு வடிவாய் இருந்ததே
பொங்கி இன்பம் நிறையவே
போற்றி நின்றார் அன்பரே!

★★★

# திருமணப் பரிசு

உலகெலாம் வென்றவன் அலெக்சாந்தர்
ஒருமுறை மகிழ்வுடன் அமர்ந்திருந்தான்
பலபல வணக்கங்கள் செய்தபடி
பார்த்திட வந்தனன் ஓர்ஏழை.

ஆயிரம் முறையவன் மண்டியிட்டான்;
அடியிணை தொட்டனன்; முத்தமிட்டான்;
வாயெலாம் பல்லெனச் சிரித்துநின்றான்;
பலபல புகழ்ந்தவன் பேசிநின்றான்!

அன்புடன் அவனிடம் அலெக்சாந்தர்
''யாதுநீ வேண்டுவ'' தெனக்கேட்டான்
''என்மகள் திருமணம் நிறைவேற
இயன்றதை உதவிட வேண்டுகிறேன்

கண்ணென வளர்த்தபெண்; ஒருவனிடம்
கைப்பிடித் தளித்திட விழைகிறேன்
எண்ணமி திருந்தென்ன? பணமில்லை;
என்னர சேதுணை யெனவந்தேன்!''

ஏழையின் துயரினைத் துடைப்பதற்கே
எண்ணமும் கூடிய தாகையினால்
தாழையின் மடலென அருள்பரப்பும்
தண்ணளி கொண்டவன் எழுகென்றான்.

முத்திரை மோதிரம் தனைக்கழற்றி
முறுவலை முகத்தினில் கொண்டேற்றி
''எத்தனை வேண்டுமோ அத்தனையும்
ஏற்றுநீ செல்''கென விடைகொடுத்தான்!

நன்றிகள் உரைத்தனன்; பொருளறைக்கு
நடந்தனன், விரைந்தனன்; அதிகாரி
தன்னிடம் மன்னவன் மோதிரத்தைத்
தந்தனன் கட்டளை தனைச்சொன்னான்.

கரும்பினும் இனியதாம் நெஞ்சுடையார்
கருணையின் வடிவமாய்த் தோன்றியவர்
விரும்பிய பெற்றுநீ செல்லென்றே
விடைகொடுத் தார்பெரும் வள்ளலவர்!

''ஐம்பதி னாயிரம் பொன்கொடுப்பாய்
அழகுற என்மகள் திருமணத்தை
எம்மவர் வியந்திட நடத்திடுவேன்
எடுஎடு விரைவினில்'' என்றுரைத்தான்.

எளியவன் இவன்மகள் திருமணத்திற்
கித்தனை பெரும்பொருள் கொடுத்திடவோ?
துளியொரு பொருத்தமும் இல்லையிதில்
சூதிருந் தாலது தெளிந்திடுவேன்.

இப்படி நினைத்தந்த அதிகாரி
இருஇரு சற்றெனெ ஓடிவந்தான்
'தப்பிருந் தாலெனை மன்னியுங்கள்;
தகுதிக்கு மீறிய பொருள்கேட்டான்.

கொடுத்திட லாமெனிற் கொடுத்திடுவேன்
கூறுக மன்னவ'' எனக்கேட்டான்.
''கொடுத்திடு கொடுத்திடு கேட்டபடி
கொடுத்திடு'' என்றனன் அலெக்சாந்தர்

வியந்தனன் மலைத்தனன் அதிகாரி
வேந்தனும் அவன்உளம் கண்டுணர்ந்தான்
நயந்திடத் தக்கநல் உள்ளமுள்ளான்
நாகரி கத்துடன் உரைக்கின்றான்.

''இளகிய நெஞ்சினை மதிக்காமல்
இயன்றதைச் சுருட்டிட எண்ணுகிறான்!
அளவுக்கு மீறிய பேராசை
அவனிடம் குடியுள துண்மைதான்!

ஆயினும் நானொரு மன்னனன்றோ
அருளிய மொழிதனை மாற்றுவதோ!
தாயினும் மேலென எனைமதித்தே
தாள்பணிந் தானிது மறந்திடவோ!

மதித்துவந் தென்னடி மண்டியிட்டான்
மன்னவன் துணையென அண்டிவிட்டான்
கொதித்திடல் முறையிலை; அருள்புரிந்து
கொடுத்திடல் தான்முறை'' யென்றுரைத்தான்

போற்றினன் மன்னனை அதிகாரி
பொருளினை ஏழையும் கேட்டபடி
ஏற்றனன்; களிப்புடன் செலக்கண்டே
இறும்பூ தடைந்தனன் அலெக்சாந்தர்.

# பாவேந்தர் பாயிரம்

ஒருநாள் அருமைப் பாவேந்தர்
உட்கார்ந் திருந்தார் வீட்டினிலே
இருவர் வந்தே நுழைந்தார்கள்
இருக்கை கொடுத்தே உபசரித்தார்.

ஒருவர் நண்பர்; மிகப்பழக்கம்
உடையார், வந்த மற்றொருவர்
அருமை நண்பர்க் குறவினராம்
அழகு மிக்க இளம்பிள்ளை.

தமிழில் வல்ல பாவேந்தர்
"தம்பி, யாரோ?" எனக்கேட்டார்
"அமிழ்தம் போன்ற பாட்டெழுதும்
அருமைக் கவிஞர் இத்தம்பி,

தங்களைப் போல் நன்றாகத்
தம்பி பாட்டுக் கட்டிடுவான்
இங்கோர் தொகுதி அச்சிட்டான்
இதுதான்" என்று கொடுத்திட்டார்.

"இந்தப் பாட்டு நூலுக்கே
ஏற்ற தாமோர் பாயிரமே
தந்து வாழ்த்த வேண்டுமெனத்
தாழ்ந்து கேட்டார் அந்நண்பர்.

பாட்டு நூலின் தாள்புரட்டிப்
பார்த்தார் புரட்சிப் பாவேந்தர்
ஓட்டை விழுந்த பானையென
உள்ள பாட்டுப் பலகண்டார்.

அங்கும் இங்கும் பலபிழைகள்
அவற்றைச் சுட்டிக் காட்டிடினோ
தங்க நண்பர் மனம்நோகும்
தம்பிக் குள்ளம் தளர்ந்துவிடும்.

என்ன செய்வ தெனப்புரியா
தேங்கி யிருந்தார் பாவேந்தர்
மின்னல் போலே ஒருகருத்து
மேவிற் றுளத்தே களிப்புற்றார்.

பேனா எடுத்தார் தாளின்மேல்
பிறந்த தொருநற் பாயிரமே!
தேனாய் மதித்து வாங்கினரே
தேடி வந்த நண்பர்களே.

நல்ல செய்யுள் நூலிதனை
நாடித் திருத்திப் படித்தாலே
வெல்லம் போலே இனிப்பாகும்
வேண்டும் சுவைகள் பெற்றிடலாம்

இவ்வா றந்தப் பாயிரத்தில்
எழுதி யிருந்தார் பாவேந்தர்
ஒவ்வா தவர்க்கும் உவப்பாகும்
உரைகள் தமிழில் பெய்திடலாம்!

# காட்டில் விருந்து

வெள்ளைக் காரத் துரை ஒருவர்
வீட்டின் முன்னே அமர்ந்திருந்தார்
பள்ளம் விழுந்த வயிற்றோடோர்
பட்டிக் காட்டான் அங்குவந்தான்.

பசியால் மிகவும் வாடுகிறேன்
பண்பு மிக்கீர் சிறிதுணவு
புசிக்கத் தந்தே உதவிடுவீர்
புண்ணியம் உண்டாம் என்றுரைத்தான்.

கருப்பர்க் குணவு கொடுப்பதில்லை
கண்டிப் பான கொள் கையிது
வெறுப்பைக் கிளறி விடாதேநீ
விரைந்து போவென் றரட்டிநின்றார்.

குடிக்கத் தண்ணீர் சிறிதேனும்
கொடுப்பீர் துரையே எனக்கெஞ்ச
அடிக்கத் தடியொன் றெடுத்துவந்தார்
அந்த வெள்ளைத் துரைப்பெருமான்

அஞ்சி ஓடிச்சென்றுவிட்டான்
அந்தப் பட்டிக் காட்டானும்
கொஞ்சங் கூடக் கவலையின்றிக்
குந்திப் புகைவிட் டார்துரையே.

வேட்டை யாடச் சென்றாராம்
வெள்ளைக் காரத் துரைஒருநாள்
காட்டு வழிதான் தவறியதால்
கால்கள் கடுக்க அலைந்தாராம்.

வழியைத் தேடிக் களைப்புற்று
வாடிச் சோர்ந்து போனாராம்
ஒளியைத் தந்த கதிரவனும்
ஓடி ஒளிந்து கொண்டானாம்.

இருட்டில் அங்கோர் குடிசையிலே
எரியும் விளக்கைக் கண்டாராம்.
சுருட்டுப் பற்ற வைத்தபடி
துரையும் சென்றார் அதுநோக்கி.

ஐயா ஐயா என்றழைத்தார்
அந்த வெள்ளைத் துரைப்பெருமான்
பைய வெளியில் வந்தொருவன்
பார்த்தான் எட்டிப் பார்த்தானே!

"நகரம் செல்லும் வழிசொன்னால்
நன்றி யுடையேன்" என்றுரைத்தார்
"மிகவும் தொலைவில் உள்ளதையா
மேலும் இருட்டு நேரமிது

விலங்குத் தொல்லை மிகவுண்டு
விடிந்த பிறகு போய்விடலாம்
கலங்கா துள்ளே வந்திடுவீர்"
கனிவாய் அழைத்தான் அம்மனிதன்.

சோறு வடித்தான்; மான்கறியும்
சுட்டு வைத்தான்; வெள்ளையரும்
வேறு பாடு கருதாமல்
விருந்தைச் சுவைத்து மகிழ்ந்தாரே!

கயிற்றுக் கட்டில் ஒன்றினிலே
கவலை யின்றித் தூங்கியவர்
வெயிலின் கதிர்கள் குடிசையுளே
விழுந்த பிறகு கண்விழித்தார்!

''பொழுது புலர்ந்தது; நகருக்குப்
போகும் வழியைச் சொல்லிடுவாய்''
எழுந்து நின்று துரைகேட்டார்
''இருங்கள்; நானும் வருகின்றேன்!''


காட்டின் எல்லை வரையந்தக்
கருப்பன் துரைக்குத் துணைசென்றான்
தோட்டம் ஒன்றின் அருகினிலே
துரையை விட்டுத் திரும்பினனே!

''வேற்று நாட்டான் எனக்கேநீ
விருந்து வைத்தாய்; துணைவந்தாய்
போற்று கின்றேன் உன்பண்பைப்
பொன்போல்! நன்றி செலுத்துகிறேன்.

''ஏதும் உதவி வேண்டுமெனில்
என்னைக் கேட்பாய்'' என்றுரைத்தார்
''பேதம் காட்டா திருந்தாலே
பெரிய உதவி யதுவாகும்!

கருப்பர் கூட மனிதர்தான்
கருணை பண்பு உள்ளவர்தான்
வெறுப்பை விட்டுப் பழகிடுவீர்?
விரட்டி யடிக்கா திருந்திடுவீர்!

இதுஎன் வேண்டு கோளென்றான்
இடித்த இடியில் வெள்ளையர்தான்
புதிய மனிதர் ஆய்விட்டார்
பொதுமை நோக்கம் பெற்றுவிட்டார்!



# இளங்கோ துறவு

வங்கக் கடலின் அலைநுரைபோல்
வண்ணக் கவரி காற்றெழுப்பச்
சிங்க அணையில் வீற்றிருந்தார்
சேர லாதப் பெருமன்னர்

செங்குட் டுவனாம் மூத்தவனும்
செய்ய மனத்தன் இளங்கோவும்
அங்கே மன்னர் அருகினிலே
அணிசெய் மணிகள் போலிருந்தார்.

முதியன் ஒருவன் அங்குவந்தான்
முன்னும் பின்னும் அறிந்துரைக்கும்
மதியன் என்றார்; மன்னவரும்
மதித்து வணங்கி வரவேற்றார்

சனியன் புகுந்த நாவுடையான்
தரித்திரத்தின் நோவுடையான்
இனிய செய்தி சொல்லாமல்
ஏதோ உளறத் தொடங்கிநின்றான்

''விரைவில் நீஇவ் வாழ்விழப்பாய்
வேந்தே பொன்னா டேகிடுவாய்
அரசை யுனக்குப் பின்னாலே
ஆளும் இளங்கோ'' என்றுரைத்தான்.

சீரில் லாத குறிகேட்டுச்
சீறி னான்செங் குட்டுவனே
யாரும் திடுக்கிட் டெழுமுன்னே
அன்புத் தம்பி எழுந்துநின்றான்.

''வயிற்றுப் பிழைப்பு நடத்திடவே
வருவ துரைக்கும் தொழில்கொண்டீர்
துயரப் படுத்திக் குடிகெடுக்கும்
தொழிலை இனிமேல் விட்டிடுவீர்!

''அண்ணன் இருக்கப் பேரரசை
ஆள முயல்வோன் வீடணனாம்
வண்ண முடியை மூத்தவர்க்கே
வழங்கும் நாடு தமிழ்நாடாம்!

''நாட்டு வழக்கும் தெரியாமல்
நாக ரிகமும் புரியாமல்
கேட்டுக் குரிய மொழிசொன்னீர்
கிழவர், அதனால் மன்னித்தேன்

''ஓடிப் போவீர்'' என்றுரைத்தான்
உயிர் பிழைத்த தெனக்கருதிக்
கேடு பரப்பும் தொழிலுடையான்
கிழவன் அகன்றான் அவைவிட்டே.

''குறிசொன் னவர்பால் இளங்கோவே
கோபம் கொள்ளல் சரியன்றே.
அறிஞர் வியக்கச் சிலபோதில்
அவ்வே பலித்தல் இயல்பாகும்''

என்றோர் அமைச்சர் அங்குரைத்தார்
இளங்கோ மேலும் கொதிப்படைந்தான்
''என்றும் அவன்சொல் பலிக்காதாம்
இன்றே மெய்ப்பிப் பே''னென்றான்.

''எண்ணம் ஒன்று நெடுநாளாய்
என்னுள் கருவாய் உருவாகி
வண்ணம் பெற்ற திந்நாளே
வழுத்து கின்றேன் பெரியோரே

''செல்வம் அரச போகமெனும்
சிறிய இன்பம் தனைத்துறந்தே
மெய்யாம் இன்ப வழிகாண
விழைந்தேன்'' என்றான் இளங்கோவே!

அன்னை தந்தை தமைவணங்கி
அண்ணன் தனையும் உடன்வணங்கி
பின்னும் அவையிற் கூடியுள்ள
பெரியோர் கூட்டம் தனைவணங்கி

வாட்டம் சிறிதும் கொள்ளாமல்
காவி பூண்டு குணவாயில்
கோட்டம் சென்றார்; துறவறமே
குறியாய்க் கொண்டு வாழ்ந்தாரே!

செந்தமிழ்த் தாய்க்கோர் அணியாகும்
சிலப்பதி காரக் காப்பியமே
அந்தமில் இன்பத் தரசாளும்
அண்ணல் இளங்கோ அருட்கொடையே!

# குயில் ஒரு குற்றவாளி

வண்ணப் பறம்பு மலைக் காட்டில்—ஒன்றி
வாழ்ந்த பறவைக் கூட்டமெலாம்
விண்ணைக் கலக்கிப் பறந்தபடி—ஒரு
வெட்ட வெளியில் கூடினவாம்!

குற்றம் செய்யும் குயில்அதனை – நீதிக்
கூண்டில் ஏற்றித் தீர்ப்புரைக்க
சுற்றம் சூழப் பறவையெலாம்—அங்குச்
சூழ்ந்து கூட்டம் கூடினவாம்!

அகவை முதிர்ந்த கான்கோழி—பெரிய
ஆந்தை யோடு மரங்கொத்தி
மிகவும் உயர்ந்த நெறித் தலைவர்—ஆக
மேன்மை யோடு வீற்றிருந்தார்

கானக் கோழி யார் எழுந்தார்—ஒரு
கனைப்புக் கனைத்துப் பேசுகிறார்
வானக் கடவுள் சான்றாக – இங்கு
வந்து பேசாய் பூங்குயிலே!

அறமன் றத்தில் பொய்யுரைகள்—பேசல்
ஆகா திதனை யறிந்திடுவாய்
குறைகள் உன்மேல் பலர்சொன்னார்—அவை
கூறு கின்றேன் கேட்டிடுவாய்

கூட வாழும் பறவைகளை — நீ
  கொடுமைப் படுத்து கின்றாயாம்!
வாடப் பிறரைத் துன்புறுத்தி—இனம்
  வளர்த்துக் கொள்ளத் துணிந்தாயாம்!

கூடு கட்டிக் கொள்ளாமல்—நீ
  குடும்பம் நடத்து கின்றாயாம்
பாடு பட்டே உழைக்காமல்—நீ
  பலனைத் திருடிக் கொண்டாயாம்!

முட்டை யிட்டாய் பிறர்கூட்டில்—அது
  மோசம் அன்றோ கருங்குயிலே
இட்ட முட்டை தமதென்றே—அவை
  இருந்து நம்பி அடைகாக்கும்.

பாசத் தோடே அடைகாத்தே - அன்பும்
  பற்றும் கொண்டே காப்பாற்றி
மோசம் போன தறியும் கால்—மனம்
  முறிந்து போவ தறியாயோ?

இட்ட முட்டை தனை நீயே—சொந்த
  இடத்தில் வைத்தே அடைகாத்தால்
நட்டம் என்ன வந்து விடும்?—பிறர்
  நலத்துக் கிடையூ றேன்செய்தாய்?

பொரித்து வெளியில் வந்தவுடன்—உன்
  பொல்லாக் குஞ்சு பிறகுஞ்சைச்
சரித்துக் கீழே தள்ளி விடும்—அவை
  சாகச் செய்யும் அஞ்சாமல்!

மோசம் செய்தல் ஒரு குற்றம்—கொலை
முடித்தல் மற்றோர் பெருங் குற்றம்
நீசக் குயிலே இதற்கெல்லாம்—இன்று
நீதான் என்ன பதில் சொல்வாய்?

கானக் கோழி பேசியவுடன்—அந்தக்
காட்டுப் பறவை அத்தனையும்
வானம் அதிர முழங்கினவாம்!—குயில்
வாழக் கூடா தென்றனவாம்!

காட்டை விட்டு விரட்டிடுவீர்!—எதிர்
கண்ட இடத்தில் கொத்திடுவீர்!
வேட்டை யாடி ஒழித்திடுவீர்—சற்றும்
வேண்டாம் ஒதுக்கித் தள்ளிடுவீர்!

வாயில் வந்த படியெல்லாம்—கத்தும்
வண்ணப் பறவைக் கூட்டத்தே
நேயக் குயிலும் பேசியதாம்—சற்று
நேரம் என் சொல் கேட்டிடுவீர்!

அமைதி கொண்டு கேட்டிடுவீர்—பேர்
அறிவு கொண்ட நெறித்தலைவீர்!
சுமத்திய குற்றம் அத்தனையும்—மறுத்துச்
சொல்ல என்னால் ஆகவில்லை!

உண்மை மறுத்துப் பொய்யுரைக்க—என்
உயிர்போம் எனினும் ஒப்பேன் நான்
கண்ணே அனைய குஞ்சுகளை—அடை
காக்க நானும் விழைகின்றேன்.

தாயாய் வாழ வேண்டுமென—நாளும்
　　தவியாய்த் தவிக்கும் என்னுள்ளம்
நாயாய் அலைய வேண்டுமெனத்—தலையில்
　　நாதன் எழுதி வைத்துவிட்டான்!

கூடு கட்டும் அறிவெனக்கு—சற்றும்
　　கொடுக்க வில்லை நமைப்படைத்தோன்
ஓடு கொண்ட ஒருமுட்டை—இட்ட
　　உடனே மற்றொன் றுருவாகும்!

வயிற்றுள் இருக்கும் மறுமுட்டை—வெளி
　　வருமுன் பொரியும் முதல்முட்டை
உயிராய் வந்த குஞ்சுதனை—வளர்க்க
　　ஓடித் தீனி சேர்த்திடுவேன்!

இரையைத் தேடி யலைவதனால்—அடை
　　இருந்து காக்கமுடியவில்லை
முறையாய்க் குஞ்சு பொரிந்திடவே—நான்
　　முட்டை யிடுவேன் பிறர் கூட்டில்!

இறைவன் செய்த கொடுமையினால்—நான்
　　இனிய தாயாய் வாழவில்லை
குறைதான் எனதா? நமைப்படைத்த—அந்தக்
　　கொடிய இறைவன் எழுதியதா?

எண்ணிப் பார்த்தே தீர்ப்புரைப்பீர்!—நான்
　　என்றன் நிலையைச் சொல்லிவிட்டேன்
மண்ணில் உங்கள் தீர்ப்புதனை—நான்
　　மதித்துப் போற்றி நடந்திடுவேன்!

குயிலின் பேச்சைக் கேட்டதன்பின்—வான்
கோழி எழுந்து கூறியது:
குயிலே தனது குற்றத்தை—ஒப்புக்
கொண்டு விட்டது கண்டீர்கள்.

உரிய தண்டம் கொடுத்திடலே—நல்
ஒழுங்காம்; நெறியாம் என்றதுவே!
பெரிய ஆந்தை வான்கோழி—சொன்ன
பேச்சுக் காமாம் போட்டதுவே!

மற்றோர் தலைவர் நெறிமன்றில்—உள்ள
மரங்கொத் திதான் எழுந்தங்கே
சற்றும் பொருத்தம் இல்லை நீர்—குயிலைச்
சாட்டும் பழியில் நெறியில்லை.

ஏதோ காக்கைக் கூட்டினிலே—முட்டை
இட்ட குற்றம் பெரிதென்றே
சூதாய்க் குற்றம் சுமத்துகின்றீர்!—தண்டம்
கொடுக்க முடிவு செய்கின்றீர்!

கானில் வாழும் நமக்கெல்லாம்—இன்ப
கானம் வழங்கிச் சிறப்பளிக்கும்
ஞானக் குயிலைத் தண்டித்தால்—அது
நமக்கே கேடாய் முடிந்துவிடும்.

பிறர்க்குக் கேடு செய்வதாய்—மிகப்
பெரிதாய்க் குற்றம் சுமத்துகிறீர்
அறவே பேச மறந்தீர்கள்—நமக்கு
அதுசெய் கின்ற நன்மைகளை!

தோட்ட மரங்கள், இலைகளிலே—ஓட்டைத்
துளைகள் போட்டே எழில்கெடுக்கும்
காட்டுப் பூச்சி புழுக்கள்தமை—விழுங்கிக்
காட்டைக் குயிலே காப்பாற்றும்!

பயறும் நெல்லும் தின்பீர்கள்—சுவைப்
பழங்கள் பலவும் தின்பீர்கள்
துயரம் நல்கும் புழுக்களையோ—தின்னும்
தொண்டு செய்ய மாட்டீர்கள்!

கம்பளிப் புழுவை உணவாக—உயர்
காட்டுக் கோழி தின்றிடுமோ?
வம்பு பேசும் ஆந்தையுடன்—மற்ற
பறவைக் குலங்கள் தின்றிடுமோ?

கன்னங் கருத்த குயிலன்றோ—அந்தக்
கம்பளிப் புழுவைத் தின்றொழிக்கும்
இன்னல் நீங்கிக் காடெல்லாம்—இன்று
இருக்கச் செய்யும் தெரியாதா?


நம்காட்டுக்குத் தொண்டு செய்யும்—அந்த
நல்ல குயிலைத் தண்டித்தால்
தன்பாட்டுக்குப் பழந்தின்னும்—பெருந்
தலைவர்க் கென்ன தண்டனையோ?

உழைத்துப் பிழைக்கும் மரங்கொத்தி—இவ்
உண்மை எடுத்துக் கூறியதும்
அழைத்துக் குயிலைப் பறவையெலாம்
அன்பாய்ப் பேசி மகிழ்ந்தனவாம்!

நெறிமன் றத்தின் தலைவர்களும்—மெய்
நீதி யறிந்து வாழ்த்தினராம்!
சிறிய குயிலும் இனத் துடனே—ஒன் றாய்ச்
சேர்ந்து பண்பாய் வாழ்ந்ததுவாம்!

குக்கூ வென்றே தேன்குரலில்—அந்தக்
குயிலும் பாடப் பறவையெலாம்
அக்கக் கென்றே தாளமிட—இசை
யருவி கானில் ஓடியதாம்!

எங்கும் மகிழ்ச்சி! இன்பமயம்!—குயில்
இசையில் காடே திளைத்ததுவாம்
திங்க ளோடு செங்கதிரும்—அங்கு
சேர்ந்து நின்று கேட்டனவாம்!



# தமிழாலயம் வெளியீடுகள்

நாரா நாச்சியப்பன் எழுதியவை

| | | |
|---|---|---|
| 1. | நாச்சியப்பன் பாடல்கள் I | 15.00 |
| 2. | நாச்சியப்பன் பாடல்கள் II | 15-00 |
| 3. | திங்களில் அச்சுத்தொழில் | 10-00 |
| 4. | றை பஞ்சதந்திர கதைகள் | 15-00 |
| 5. | நூயகப் பெருமான் | 4-00 |
| 6. | ஏழாவது வாசல் | 5-00 |
| 7. | அசோகர் கதைகள் | 2-00 |
| 8. | பறவை தந்த பரிசு | 4-00 |
| 9. | மாயத்தை வென்ற மாணவன் | 5-00 |
| 10. | அப்பந்தின்ற முயல் | 5-00 |
| 11. | தாவிப் பாயும் தங்கக் குதிரை | 4-00 |
| 12. | பள்ளிக்குச் சென்ற சிட்டுக்குருவிகள் | 5-00 |
| 13. | குயில் ஒரு குற்றவாளி | 5-00 |

தமிழாலயம் 137, ஜானி ஜான்கான் தெரு
சென்னை-14